[2005 மார்ச் 30

254—

தொழில்நுட்பப் பயிலகம்

***20485—திரு. ஆ.கு.சீ அன்பழகன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூரில் அரசு தொழில்நுட்பப் பயிலகம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூரில் அரசு பாலிடெக்னிக் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் கல்வித் துறையிலே பல்வேறு திட்டங்களை அறிவித்து கல்லாமையே இல்லாமல் ஆக்கி கல்விப் புரட்சியைச் செய்துள்ளார்கள். ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் 97 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கும் திட்டத்தினை அறிவித்து மாணவர்கள் வயிற்றில் பால் வார்த்தார்கள். எனது தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி இல்லாத காரணத்தால் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு மாணவர்கள் 25 கிலோ மீட்டர் தூரம் சென்று தொழில் கல்வி படிக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. எனவே, அடுத்த கல்வி ஆண்டிலாவது பெரணமல்லூரில் தொழில்நுட்பக் கல்லூரியாவது, சேத்துப்பட்டு பகுதியில் கலைக் கல்லூரியாவது அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாலிடெக்னிக் அமைக்க வேண்டுமானால், நில மதிப்பு நீங்கலாக சுமார் 10 கோடி ரூபாய் செலவாகும். தமிழகம் முழுவதும் உள்ள மொத்தம் 209 தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 58,089. இவற்றில் 2004–2005 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 46,819. 11,270 இடங்கள் காலி இடங்களாக உள்ளன. பெரணமல்லூர் தொகுதி அடங்கியுள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது 8

2005 மார்ச் 30]

பாலிடெக்னிக் கல்லூரிகள் சுய நிதி அடிப்படையில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் அங்கீகாரம் பெற்று இயங்கி வருகின்றன. இதில் 2004–2005 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 2,260 இடங்கள். அவற்றில் 937 இடங்கள் மாணவர்கள் சேர்க்கை இல்லாமல் காலி இடங்களாக இருக்கின்றன. ஆகவே இருக்கின்ற பாலிடெக்னிக் கல்லூரிகளிலே கணிசமான இடங்கள் காலியாக இருப்பதால் மேலும் புதிய கல்லூரிகளைத் தொடங்கினால் காலி இடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இது வழிவகுக்கும். மேற்கண்ட சூழ்நிலையில் பெரணமல்லூர் தொகுதியில் புதியதாக தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்குவதற்கான அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன்.

திரு. ஆ.கு.சி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியையாவது அமைக்க வாய்ப்புள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கே அந்தக் கலைக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கலைக் கல்லூரி தொடங்க வேண்டுமானால் அதற்குரிய அடிப்படைத் தகுதிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதேசமயத்தில் தனியார் புதிய கலைக் கல்லூரிகள் தொடங்குவதற்கு இந்த அரசு அனுமதி தருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறையிலே கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்தப் பகுதியிலே தேவையின் அடிப்படையிலே அவசியம் இருப்பின் கண்டிப்பாக அதற்கு அனுமதி அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 255, திரு. ஏ. பூவராகமூர்த்தி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

255—

கலைக் கல்லூரி

***32862**—**திரு. ஏ. பூவராகமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூர் ஒன்றியத்தில் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஏ. பூவராகமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நான் கேட்காமலேயே என் தொகுதிக்கு கோடிக்கணக்கில் செலவழித்து பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்றித் தந்த எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–35

மேலும் அச்சரப்பாக்கம் தொகுதி மற்றும் மதுராந்தகம் தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளிலும் உள்ள மக்கள் ஏழையெளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பிள்ளைகள் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்றால் 150 கிலோ மீட்டர் தூரமுள்ள சென்னைக்கும், ஏறக்குறைய 60, 70 கிலோ மீட்டர் தூரமுள்ள செங்கல்பட்டிற்கும், 60, 70 கிலோ மீட்டர் தூரமுள்ள திண்டிவனத்திற்கும் சென்று படிக்கக்கூடிய கடினமான சூழ்நிலை உள்ளது. 2, 3 பேருந்துகளில் மாறி, மாறி செல்ல வேண்டிய ஒரு கடினமான சூழ்நிலை உள்ளது. எனவே, இந்த ஆண்டு அம்மா